**தெரன தொலைக்காட்சி சேவை உடனான இராஜாங்க செயலாளர் மைக்கல் ஆர். பொம்பேயோவின் நேர்காணல்**

**ஒக்டோபர் 28, 2020**

**கேள்வி**: எங்களுக்கு கொழும்பில் இந்த நேரத்தை வழங்கியமைக்கு நன்றி, இராஜாங்க செயலாளர் பொம்பேயோ அவர்களே. உங்கள் வருகை முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இந்த விஜயம் மேற்கொள்ளப்படும் தருணத்துடன் பார்க்கும் போது இது மிகவும் அரிதானதாகவும் வித்தியாசமானதாகவும் பார்க்கப்படுகிறது. இந்த தருவாயில் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியிருந்த மிக முக்கியமான விடயங்கள் என்ன?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** நல்லது, உங்களுடன் கலந்துரையாட இந்த சந்தர்ப்பத்தை வழங்கியமைக்கு நன்றி. இதனைப் பாராட்டுகிறேன். கொழும்புக்கு வர கிடைத்தமை சிறப்பாக உள்ளது.

இதோ பாருங்கள், இந்த பிராந்தியத்துக்கு நான் நிறைய தடைவகள் வந்துள்ளேன். முன்னதாகவே நான் இங்கு வர திட்டமிட்டிருந்தேன். உலகம் வேறு திசையில் சென்றுவிட்டமையால், நான் அதை சற்று பின்தள்ளி வைக்க வேண்டி ஏற்பட்டது. இருப்பினும் தற்போது இங்கு வருவதற்கு என்னால் முடிந்துள்ளது. இங்கு இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இது பிராந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நேரமாகும். இலங்கையில் எமக்கு இருப்பதை போன்றும் அமெரிக்காவில் எமக்கு இருப்பதைப் போன்றுமான சிறந்த ஜனநாயகங்களானது, வாழ்க்கை எப்படி செயற்பட வேண்டும் மற்றும் இறையாண்மையுடைய நாடுகள் எப்படி இருக்க வேண்டும் மற்றும் மக்கள் அவர்களுக்கு விருப்பமான வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பொன்றை பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு சுதந்திரமளிப்பது ஆகியவற்றுக்கான பகிரப்பட்ட நோக்கமொன்றை கொண்டுள்ளன.

அந்தச் செய்தியை பகிர்ந்துகொள்ளவதற்கு இங்கு வர வேண்டுமென நான் விரும்பினேன். இலங்கையின் இறையாண்மையை அங்கீகரிப்பதற்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய அமெரிக்கா தயாராக இருக்கிறது என்பது எனக்கு தெரியும் என்கின்ற போதிலும், அமெரிக்கா ஒரு நண்பன், பங்காளி மற்றும் உலகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான பகிரப்பட்ட நோக்கமொன்றுடன் கூடிய ஜனநாயக நாடொன்று என்பதை இலங்கை மக்கள் புரிந்துக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் நான் இங்கு வர விரும்பினேன்.

**கேள்வி**: இலங்கை மற்றும் அமெரிக்காவின் எதிர்கால உறவுகளுக்கு இலங்கைக்கான இந்த முக்கிய விஜயம் அளிக்கக்கூடிய விடயங்களையும் அமெரிக்காவுடனான மேம்படுத்தப்பட்ட உறவுகள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டமைச்சு வெளியிட்ட கருத்துக்களையும் நீங்கள் எப்படி குறிப்பிடுவீர்கள்?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** இந்த விஜயமும் அதேபோல், ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டமைச்சர் மற்றும் அவரது அணியினருடனான சந்திப்புகளும் சிறப்பாக அமைந்திருந்தன. பல வாய்ப்புகளும் நாம் செய்யக்கூடிய பல விடயங்களும் இருக்கின்றன. அமெரிக்க தனியார் வர்த்தகங்கள் இங்கு முதலீடு செய்து தொடர்பில் நாம் நிறைய பேசினோம். இங்கு ஏற்கனவே இருக்கும் வர்த்தகங்கள் மேலும் முதலீடு செய்வது மட்டுமன்றி, விவசாயம், புதுபிக்கத்தக்க சக்தி மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளிலான புதிய வாய்ப்புகள் பற்றியும் இலங்கை மக்களுக்கான நிறைய வாய்ப்புகள் பற்றியும் நாம் கலந்துரையாடினோம்.

இலங்கை அதனது பங்கை செய்ய வேண்டியிருக்கும். அது வரவேற்கப்படுவதாக இருக்கும். அமெரிக்க முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு விரும்பக்கூடிய வகையில், அது சட்டத்தின் ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை கொண்டிருக்க வேண்டும். நாம் அதை நிறைவேற்றுவோம்

என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நாம் அதை செய்யும் போது, இங்கு வரும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அது சிறந்ததாக அமையும். எனினும், இலங்கை மக்களுக்கு அது மிகவும் சிறப்பானதாக இருக்கும். தொழில் வாய்ப்புகள் கிடைக்கும், செல்வ செழிப்பு உருவாக்கப்படும், அத்துடன், ஏதேச்சாதிகார ஆட்சிகளினால் சற்றும் செய்ய முடியாத வழியொன்றில் ஜனநாயகங்களும் தனியார்துறையும் செய்யக்கூடிய அனைத்து விடயங்களும் இருக்கும்.

**கேள்வி:** இராஜாங்க செயலாளர் அவர்களே, நீண்டகால சுபீட்சத்துக்கான தமது பொருளாதார சுதந்திரத்தை பாதுகாத்துக்கொள்ள கடினமான ஆனாலும், அவசியமான தீர்மானங்களை எடுக்குமாறு இலங்கையை வலியுறுத்தி பிரதி உதவி செயலாளர் தொம்ப்ஸன் கருத்து வெளியிட்டிருந்தார். இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளி என்ற வகையில், இலங்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கும் அந்த கடினமான தீர்மானங்கள் அல்லது தெரிவுகள் என்ன?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** ஆமாம், இலங்கை செய்ய வேண்டிய விடயங்கள் என்னவென்பது எனக்கு துல்லியமாக தெரியும். ஆனால், மிக முக்கியமாக இலங்கை மக்களுக்கும் இலங்கை தலைமைத்துவத்துக்கும் அது தெரியும். பாருங்கள், இது அமெரிக்கா அதன் நோக்கத்தை இலங்கை மீது திணிப்பது பற்றியது அல்ல, முற்றிலும் அதற்கு எதிரானது. இது இங்கு இலங்கை மக்களுக்கான வாழ்க்கையை சிறப்பாக்குவதற்கு நாம் செய்யக்கூடிய விடயங்களை இலங்கையே அமெரிக்காவுடன் பகிர்ந்துகொள்வதாகும். இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் தெரிவுகள் அவைதான் என்று நாம் நம்புகிறோம். அது செய்யும் போது வாய்ப்புகள் உருவாகும், அமெரிக்காவுடன் மட்டுமல்லாது இந்த பிராந்தியதிலுள்ள ஏனைய நாடுகளுடனும் சிறந்த பங்காண்மைகள் கிடைக்கும்.

நான் இந்தியாவில் இருந்தே இங்கு பயணித்தேன். இன்று நான் இங்கிருந்து மாலைத்தீவுக்கு செல்லவுள்ளேன். இராஜாங்க செயலாளராக நான் பதவி வகித்த காலப்பகுதியில் ஆசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் நான் பெருமளவில் இருந்திருக்கிறேன். தென் கொரியா அல்லது அவுஸ்திரேலியா அல்லது ஜப்பான் என எதுவாக இருந்தாலும் இந்த ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை கொண்டிருக்கின்றன. ஆகவே, அதன் அங்கமொன்றாகவும் உண்மையான வாய்ப்பு மற்றும் உண்மையான இறையாண்மை போன்று எதிர்காலத்திற்கு புலப்படுவதன் அங்கமொன்றாகவும் இருக்க இலங்கை விரும்பும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கை மக்களுக்கு வாழ்க்கையை சிறப்பானதாக்கும் விடயங்கள் இவையே. அதைவிடுத்து, ஏனைய நாடுகள் பிரசன்னமாகி நாட்டின் மீது பாரிய கடனை சுமத்தி அந்த நாட்டின் மீது பாரிய சுமைகளை திணிப்பதன் வரலாறு அதனை செய்யாது. அவர்கள் இங்கு வரும் போது தனியார்துறையினருடன் பிரசன்னமாக மாட்டார்கள் என்பதுடன், இலங்கையர்களையும் வாடகைக்கு அமர்த்த மாட்டார்கள். அமெரிக்கா உள்ளிட்ட ஜனநாயக நாடுகள் வித்தியாசமான நோக்கத்தை கொண்டுள்ளன. அந்த பகிரப்பட்ட நோக்கம் தொடர்பில் எம்மால் நெருக்கமாக ஒன்றிணைந்து பணியாற்றக் கூடியதாக இருக்கும் என்ற உண்மையான நம்பிக்கையை இன்றைய சந்திப்புகள் எனக்கு தந்துள்ளன.

**கேள்வி:** நடுநிலையான நாடாகவும் புவிசார் அரசியல் அதிகார போட்டியில் சிக்கிக் கொள்ளமால் இருப்பதற்குமான இலங்கையின் விருப்பத்தை அமெரிக்கா மதிக்கும் என்பதை இது அர்த்தப்படுத்துகிறதா?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** அது தெரிவுகள் பற்றியது. அனைத்து நாடுகள் தெரிவுகளை மேற்கொள்கின்றன. உங்களுக்கு ஜனநாயகமும் சுதந்திரமும் வேண்டுமா?, என்பதே தெரிவுகளாக இருக்கும். இலங்கை தலைமைத்துவத்துக்கு அது நிச்சயமாக வேண்டும் என்று

நான் நம்புகிறேன். அந்த விடயங்களை நீங்கள் தெரிவுசெய்யும் போது, இறுதியில் நீங்கள் பல்வேறுபட்ட பங்காளர்களை அடைகிறீர்கள். இறைமையுள்ள நாடென்ற வகையில் இலங்கை முடிவெடுப்பதை உண்மையில் மதிக்கும் பங்காளர்களை நீங்கள் அடைகின்றீர்கள். பாதுகாப்பு ஒத்துழைப்பு இருக்க வேண்டும் எனும்போது, போதைப்பொருட்களுக்கு எதிரான சிறந்த பணியை நீங்கள் மேற்கொள்ளக்கூடிய வகையில், இரண்டு கடலோர காவற்படை கட்டர் கப்பல்களை நாம் வழங்கியுள்ளோம். நாம் இங்கு பிரசன்னமாகி இலங்கையினுள் பயங்கரவாத ஆபத்து குறைவடைந்துள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் உதவுகிறோம்.

ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து பணியாற்றும் விடயங்கள் இவைதான். பகிரப்பட்ட நோக்கமொன்றும் பகிரப்பட்ட இலக்கொன்றும் எமக்கு இருக்கிறது. எமது இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் மிகவும் நெருங்கமான, மிகவும் துடிப்பான மற்றும் வலிமையான உறவொன்றை இறுதியாக அடையும் ஸ்தானமொன்றை இலங்கை மக்கள் இறுதியாக அடைவார்கள் என்று நான் பெரிதும் நம்புகிறேன்.

**கேள்வி:** எம்.சி.சி. ஒப்பந்தத்தை பொறுத்த வரையில், இலங்கை இரண்டு முறை காலக்கெடுவை தவறவிட்டு விட்டது. அமெரிக்கா இன்னும் அதைப்பற்றி பேசுகிறது. எம்.சி.சி. ஒப்பந்தத்துக்குள் பிரவேசிப்பது இலங்கை அரசாங்கத்துக்கு அரசியல் ரீதியாக சவாலாக இருக்கும் பட்சத்தில் என்ன நடக்கக்கூடும்?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** ஆமாம், நாம் வழங்க முன்வந்த பல விடயங்களில் அது ஒன்று மட்டும் தான். அது இலங்கைக்கு நியாயமானதாக இல்லாத பட்சத்தில், அதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க இலங்கையர்கள் முடிவு செய்வார்கள். எமது உறவின் நட்பு, போக்குகள், ஆழம் மற்றும் பின்னல்நிலை என்பன ஏதேனுமொரு பரிவர்த்தனையையோ அல்லது ஏதேனுமொரு வாய்ப்பையோ மிகவும் விஞ்சி அப்பால் செல்கிறது. இன்னும் பல வரும். இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நாம் அவை தொடர்பில் நெருங்கி பணியாற்றுவோம்.

**கேள்வி:** பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்கள் பற்றி - இது பற்றி நீங்கள் கூட்டு ஊடக சந்திப்பிலும் குறிப்பிட்டீர்கள் - பொறுப்புக்கூறல் தொடர்பில் அளித்த வாக்குறுதிகள் தொடர்பில் இலங்கை செயற்படுவதன் நிமித்தம் இலங்கையுடன் அமெரிக்கா எவ்வாறு பணியாற்றும்? அத்துடன், அமெரிக்காவுக்குள் உட்பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டிருக்கும் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா பற்றியும்? இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டனவா?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** ஆமாம், இவை அனைத்தையும் பற்றி நாம் இன்று பேசினோம். அமெரிக்காவில் எமக்கு சட்ட ரீதியான தேவைபாடுகள் உள்ளன. அவற்றை நாம் நடுநியாயமாக பயன்படுத்துகிறோம். நாம் உண்மைகளை சரியாக பெற முயற்சிக்கிறோம். ஓவ்வொரு விடயத்திலும் நாம் அதை செய்கிறோம். பொறுப்புக்கூறலை பொறுத்த வரையில், நான் இது பற்றி ஜனாதிபதியுடன் பேசினேன், வெளிநாட்டமைச்சருடனும் நான் பேசினேன். இலங்கை மக்கள் பொறுப்புக்கூறலையும் நீதியையும் விரும்புகின்றனர் என்றும் இந்த தலைவர்கள் அதை நிறைவேற்றுவதில் நோக்கம் கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். இறுதியில் எங்கு முடியுமோ அங்கு நாம் உதவுவோம். எம்மால் சில தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியும். நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் யோசனைகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு சர்வதேச அரங்குகளில் நிச்சயாமாக எம்மால் அவர்களுடன் பணியாற்ற முடியும். எனினும், இது தொடர்பில் செயற்பட வேண்டியது இறுதியில் இலங்கை தலைமைத்துவமாகவும் இலங்கை மக்களாகவுமே இருக்கும்.

அது முக்கியமானது. உங்களது நாடு இதை சரியாக புரிந்துக்கொள்கிறது என்று நாம் கருதுகிறோம். இலங்கை வரலாற்றின் அந்த பகுதியானது பொருத்தமான வழியொன்றில்

கையாளப்பட்டது என்பதையும் உண்மையில் என்ன வெளிப்பட்டது என்பதை அது அங்கீகரிக்கிறது என்பதையும் உறுதிப்படுத்துவதே இங்கு சரியான விடயமாகும். எனினும், முன்னால் என்ன இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் நடக்கக்கூடிய அனைத்து நல்ல விடயங்கள் என்பனவற்றை நோக்கிய அவதானிப்புடன் அதை செய்ய வேண்டும்.

**கேள்வி:** இறுதியாக ஒரு கேள்வி, இராஜாங்க செயலாளர் பொம்பேயோ அவர்களே. சீனா இலங்கையில் அதிகரித்த வகிபாகமொன்றை கொண்டிருக்கிறது. இந்தியாவும் கூட. சோபா உடன்படிக்கை மற்றும் எம்.சி.சி. ஒப்பந்தம் போன்றவற்றை அமெரிக்கா வழங்குகிறது. இன்னும் வேறென்ன விடயங்கள் முன்மொழியப்பட்டுள்ளன?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** நிறுவனங்கள், தனியார் முதலீடுகள், பங்காண்மைகள், மற்றும் நட்புறவையே அமெரிக்கா ஏறக்குறைய எப்போதும் வழங்குகிறது. அப்படித் தான் நாம் அமெரிக்காவில் இயங்குகிறோம். நாம் அரச அனுசரனையுடனான தொழில்முயற்சிகளுடன் வருவதில்லை. நாடொன்று திருப்பிச் செலுத்த முடியாத கடன் பொதிகளுடன் நாம் வருவதில்லை. அரசாங்கத்தின் மிரட்டி பணம் பறிக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் அந்த கடனை பயன்படுத்த முயற்சிக்க மாட்டோம்.

முன்னேறுவதற்கான வாய்ப்பு, உண்மையான வாய்ப்புகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பம், உலகம் முழுவதும் பயணிப்பதற்கும் மற்றும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் அவர்களது குடுத்தினருக்கும் சிறந்த வாழ்க்கையொன்றை ஏற்படுத்துவதற்குமான வாய்ப்பு என இலங்கை மக்கள் விரும்புவதையே நாமும் விரும்புகிறோம். அவை இரண்டும் வெவ்வேறான இரு வடிவங்கள். ஒன்று ஜனநாயகத்திற்கும் சுதந்திரத்திற்குமான வடிவமாகும். மற்றையது கொடுங்கோன்மையான சர்வாதிகார வடிவமொன்றாகும். இலங்கை மக்கள் தமக்காக சரியான தெரிவுகளை மேற்கொள்வார்கள் என்று நாம் நம்புவதுடன், அது இங்கு குறிப்பிடதக்க நீண்டகாலமாக இருக்கிறது. ஆசியாவின் மிகப் பழமையான ஜனநாயக நாடாக இலங்கை இருப்பதாக வெளிநாட்டமைச்சர் எனக்கு நினைவூட்டினார். அந்த பாரம்பரியம் முக்கியமானதாகவும் சக்திவாய்ந்ததாகவும் இருக்கும் என்றும் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் அதிகரித்த முறையிலான சிறந்த உறவொன்றை அது அர்த்தப்படுத்தும் என்றும் நான் நம்புகிறேன்.

**கேள்வி:** உங்களது நேரத்திற்கு மிக்க நன்றி.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** நன்றி. எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி.